இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 49 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 11 – திங்கட்கிழமை 28 செப்டம்பர் 2026 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 49 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 11 - Monday 28 September 2026 - Trichy ★★ 10 Pages ₹ 5.00


## கொடுத்த வாக்குறுதிகளை மறந்து மக்களுக்கு மாற்றம் எனச் சொல்லி மிகப்பெரிய ஏமாற்றத்தைத் தந்திருக்கிறார்கள்!

## செய்த தவறை மீண்டும் செய்துவிடாதீர்கள்! சட்டமன்றத்தில் கேள்வி கேட்டால் பாட்டுப் பாடுகிறார்கள்!

# தாராபுரத்தில் உதயசூரியன் வெல்லட்டும்! 'டம்மி' முதல்வருக்கு பாடம் புகட்டுவீர்!

## பிரச்சாரக் கூட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வேண்டுகோள்!

**தாராபுரம், செப். 28 – தாராபுரம் (தனி) சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதையொட்டி, கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின், நேற்று முன்தினம் தனது தேர்தல் பரப்புரையைத் தொடங்கினார். முதல் கட்டமாக நத்தப்பாளையம் பகுதியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை வருமாறு:–**

நத்தம்பாளையத்தில் இவ்வளவு சிறப்பான வரவேற்பு கொடுத்திருக்கின்ற உங்கள் அனைவருக்கும், முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5 மாதத்துக்கு முன்பு இதே தாராபுரத்துக்கு வந்தேன். `உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்' என்று உங்களிடம் வேண்டுகோள் வைத்தேன். நீங்களும் வாக்களித்து வெற்றிபெற வைக்கிறோம் என்று சொன்னீர்கள். ஆனால், வெற்றி வாய்ப்பை இழந்துவிட்டோம். இன்று மீண்டும் ஒரு இடைத்தேர்தல் வந்திருக்கிறது என்றால், அதற்கு யார் காரணம் என்று உங்களுக்குத் தெரியுமா?

ஏப்ரல் 23-ஆம் தேதி தேர்தல் நடந்தது. மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடந்தது. தமிழ்நாட்டில் ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், ஒரு கட்சிக்கு குறைந்தது 118 சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வாக வேண்டும். ஆனால், இன்று அமைந்துள்ள இந்த ஆட்சி அறுதிபெரும்பான்மை பெற்ற ஆட்சியா? தமிழ்நாட்டு மக்கள் வெறும் 107 சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்புனீர்கள். அதிலும் நீங்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு வாக்களித்தீர்கள். ஆனால் அவர்களை த.வெ.க விலைக்கு வாங்கிவிட்டதால்தான் இப்போது இடைத்தேர்தல் வந்திருக்கிறது.

சகோதரி சுகன்யா அவர்களுக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து சட்டமன்றத்துக்கு நீங்கள் அனுப்ப வேண்டும்.

**உங்களுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்!**

தலைவர் அவர்கள் சகோதரி சுகன்யா அவர்களை உங்களிடத்தில் ஒப்படைத்துள்ளார்கள். சென்ற முறை செய்த தவறை மீண்டும் செய்ய மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களிடத்தில் ஒப்படைத்துள்ளார்கள்.





நமது வெற்றி வேட்பாளர் சகோதரி சுகன்யா அவர்கள் நன்கு சட்டம் படித்தவர், வழக்கறிஞர். உங்களுக்காக உங்கள் தொகுதிக்காக இந்தப் பகுதி மக்களுக்காக சட்டமன்றத்தில் உங்களுக்காக குரல் கொடுக்கக்கூடியவர்.

இன்று ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கிறார்களே, அவர்கள் எல்லாம் சட்டமன்றத்தில் என்ன செய்கிறார்கள்? நீங்கள் எல்லாம் தொலைக்காட்சியில் நேரலையில் பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்.

> **“எங்குப் பார்த்தாலும் மின்வெட்டு. முதலமைச்சர் தொகுதியிலேயே மின்சாரம் கிடையாது. அமைச்சர்கள் பங்கேற்கிற நிகழ்ச்சியில் மின்சாரம் கிடையாது. நேற்று ஓர் அமைச்சர் பேசும்போது மின்சாரம் போய்விட்டது. இப்படி ஒரு மோசமான ஆட்சி. எவ்வளவு தைரியம் இருந்தால் அ.தி.மு.க அவர்களுடைய சின்னத்தில் நின்று, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களுடைய உழைப்பில் வெற்றிபெற்று, பதவி ஏற்ற பத்தே நாளில் கட்சி மாறி, இன்று மீண்டும் உங்களிடம் வந்து ஒப்படைத்திருக்கிறார்கள் என்றால், நீங்கள் சென்ற முறை செய்த தவறைச் செய்துவிடுவீர்கள் என்கிற அந்த எண்ணம்தான்.”**

10ஆம் தேதி முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டார். பெரும்பான்மையுடன் போய்ப் பொறுப்பேற்றுக் கொண்டாரா? கிடையாது. அவருக்குக் கிடைத்தது வெறும் 107 சட்டமன்ற உறுப்பினர்கள்தான். என்ன செய்தார்?

**முதுகில் குத்துகிற துரோகிகள்!**

நம்முடன் கூட்டணியில் இருந்து, நம் தலைவரின் பெயரைச் சொல்லி, நம் கூட்டணிக் கட்சிகள் வெற்றிபெற்ற கட்சி எல்லாம் சென்று ஆதரவு கொடுத்தார்கள். ஏன்? மீண்டும் தமிழ்நாட்டுக்கு ஆளுநர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்று ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துப் போனார்கள்.

ஒரு சிலர் தலைவரிடம் சொல்லிவிட்டுப் போனார்கள், ஒரு சிலர் தலைவரிடம் சொல்லாமலேயே திருட்டுத்தனமாகவும் சென்றார்கள். அது யார் என்று உங்களுக்குத் தெரியும். நிச்சயமாக நாம் மறக்க மாட்டோம். தமிழ்நாட்டு மக்கள் மறக்க மாட்டார்கள். முதுகில் குத்துகிற துரோகிகளைத் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

இப்போது இங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர், நீங்கள் தேர்ந்தெடுத்த அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர் உங்கள் முதுகில் குத்தியிருக்கிறார். அவர்களுக்குத் திரும்பவும் அந்த வாய்ப்பைக் கொடுப்பீர்களா?

இந்த முதலமைச்சர் என்ன செய்தார்? அ.தி.மு.கவின் தலைவர்களுடைய வீட்டுக்கெல்லாம் சென்று, அவரே சோபா விநியோகம் செய்தார். கையில் சோபாவுடனேயே சென்றார். எல்லாரும் பார்த்திருப்பீர்கள் தொலைக்காட்சியில், பார்த்தீர்களா இல்லையா? எல்லாக் கட்சித் தலைவர்களின் வீட்டிற்கும் சோபா சென்றது. சோபா எடுத்துக்கொண்டு போனது யார்? முதலமைச்சர், அவரே டோர் டெலிவெரியாக விநியோகம் செய்தார். அதே மாதிரி மே 10ஆம் தேதி ஆட்சி அமைத்தார். முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சட்டப்பேரவையில் வாக்கெடுப்பு நடந்தது. எதிர்க்கட்சித் தலைவராகிய நான், பேசினேன். உங்களுக்கு அறுதிப் பெரும்பான்மை கிடையாது, பெரும்பான்மை கிடையாது. 118 வேண்டும், உங்களிடம் கிடையாது.

**எங்கள் தயவில் நடக்கும் ஆட்சி!**

எங்கள் தயவில், எங்கள் தலைவருடைய பெயரைச் சொல்லி, எங்கள் ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி வாக்குக் கேட்டு வெற்றி பெற்றவர்களுடைய தயவில், எங்கள் தயவில் ஆட்சி அமைத்திருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, அ.தி.மு.கவை கிட்டத்தட்ட இரண்டாகப் பிளந்துவிட்டீர்கள். அதில் ஒரு குழு உங்களுக்கு வாக்களித்தார்கள். அதை வைத்து நீங்கள் ஆட்சி அமைத்தீர்கள். இந்தக் கேவலத்தைப் பார்க்க, நாங்கள் உள்ளே இருக்க மாட்டோம், நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்று வெளிநடப்பு செய்து வந்துவிட்டோம். இதுதான் நடந்தது.

மே 11-ஆம் தேதி சட்டமன்ற உறுப்பினரை நீங்கள் தேர்வு செய்து அனுப்பினீர்களல்லவா, அவர்கள் பெயர் என்ன? சத்தியபாமாவா? பெயரையே மாற்றிவிட்டீர்களா? பெயர் இப்போது, பெட்டிபாமாவா? பெட்டிபாமா.

தலைவர்களுக்கெல்லாம் சோபா, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பெட்டி. இந்த ஆட்சி அமைந்ததிலிருந்து இந்த முதலமைச்சர் என்ன செய்கிறார் என்றால், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால் அவர்கள் மீது வழக்குப் போடுவது. அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினரைப் பார்த்தால் அவர்களுக்குப் பெட்டி கொடுத்து அவர்களை வாங்குவது.

**பெட்டி கொடுத்து எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கியவர் விஜய்!**

நம்மைச் சொல்வார், நம் மீது ஒரு புகார் சொல்வார்கள், என்ன? இவர்கள் வாக்கிற்குப் பணம் கொடுக்கிறார்கள், வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கிறார்கள் என்று உண்மைக்குப் புறம்பான பொய்யைச் சொல்வார். ஆனால், இந்த முதலமைச்சர்செய்ததோ பெரிய மாற்றம், என்ன தெரியுமா செய்தார்? மொத்தமாகவே, சட்டமன்ற உறுப்பினரையே விலைக்கு வாங்குவது. இப்போது அப்படித்தான் அ.தி.மு.கவிலிருந்து கிட்டத்தட்ட ஏழு சட்டமன்ற உறுப்பினர்களைப் பெட்டி கொடுத்துத் தூக்கியிருக்கிறார்கள். அதற்கான தேர்தல்தான் இது.

மே 10ஆம் தேதி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டார், மே 11-ஆம் தேதி அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுக் கொண்டோம். பத்தே நாள்கள்தான், மே 23-ஆம் தேதி விரலில் வைத்த அந்த மை கூடக் காய்ந்திருக்காது, அவர்கள் சட்டப்பேரவையிலேயே கட்சி மாறிப்போய் அந்தக் கட்சியில் போய் சேர்ந்தனர். நாங்கள் அப்போதே சொன்னோம், நம் தலைவர் சொன்னார். `இங்கு அநியாயமான குதிரை பேரம் நடக்கிறது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரையும் விலை கொடுத்து வாங்கிக் கொண்டு இருக்கிறீர்களே' என்று நம் தலைவர் சொன்னார். கிடையாது, குதிரை பேரத்திற்கு என்ன சாட்சி இருக்கிறது, குதிரை பேரம் நடக்கவில்லை என்றார்கள்.

**தவறை மீண்டும் செய்வீர்களா?**

இப்போது நான் சொல்கிறேன், எந்தச் சட்டமன்ற உறுப்பினரை நீங்கள் வெற்றிபெற வைத்து அனுப்பினீர்களோ, எந்தச் சின்னத்தில் வாக்களித்து அனுப்பினீர்களோ, அவர்கள் இன்று கட்சி மாறி வேறு கட்சிக்குச்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### 2022ம் ஆண்டு முதல் நடப்பு ஆண்டு வரை

# நாடு முழுவதும் 33 எம்.பி.க்கள், 78 எம்.எல்.ஏ.க்கள் கட்சி தாவல்!

## 111 மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ளனர்!

புதுடெல்லி, செப்.28–

இந்தியாவில் 2022ம் ஆண்டு முதல் 111 எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சிகளுக்கு தாவியுள்ளதாக ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் பகீர் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் தேர்தல் களத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றி பெறும் அரசியல்வாதிகள், தங்களின் சொந்த நலனுக்காகவும் அதிகாரத்திற்காகவும் அவ்வப்போது எதிர்க்கட்சிகளுக்கு தாவுவது தொடர்கதையாக இருந்து வருகிறது. இதனைத் தடுக்கும் வகையில் கட்சித் தாவல் தடைச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும், பல்வேறு வழிகளில் மக்கள் பிரதிநிதிகள் கட்சி மாறுவது வாடிக்கையாகி விட்டது. இந்த சூழலில், கடந்த 2022ம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலகட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளின் அணி மாறுதல் நடவடிக்கைகள் குறித்து ஜனநாயக சீர்திருத்தங்களு க்கான சங்கம் (ஏ.டி.ஆர்.) தீவிர ஆய்வு மேற்கொண்டு வந்தது.

அந்த ஆய்வறிக்கையில் வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் இந்திய அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. நாடு முழுவதும் கடந்த 2022ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில், 26 மக்களவை எம்.பி.க்கள், 7 மாநிலங்களவை எம்.பி.க்கள் மற்றும் 78 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 111 மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ளனர். இதில் சுயேச்சையாக கட்சி தாவியவர்கள், ஒட்டுமொத்த கட்சியை இணைத்தவர்கள், பதவியை ராஜினாமா செய்து விட்டு இடைத் தேர்தலில் வென்றவர்கள் மற்றும் தகுதி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் தேர்வானவர்கள் அடங்குவர். அதிகபட்ச மாக நாகாலாந்து மாநிலத்தில் ஆளும் தேசியவாத ஜனநாயக முற்போக்கு கட்சியுடன் ஏற்பட்ட அரசியல் உடன்பாடு காரணமாக 32 எம்.எல்.ஏ.க்கள் கட்சி மாறியுள்ளனர்.

இவ்வாறு கட்சி மாறிய மக்கள் பிரதிநிதிகளை வளைத்துப் போட்டதில் நாகா மக்கள் முன்னணி (என்.பி.எப்.) 32 பேருடனும், பாஜக 29 பேருடனும் அடுத்தடுத்த முன்னிலை இடங்களில் உள்ளன. மேலும் என்.சி.பி.ஐ. கட்சிக்கு 20 பேரும், காங்கிரசுக்கு 9 பேரும், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா அணிக்கு 8 பேரும், என்.பி.பி.க்கு 6 பேரும், அருணாச்சல மக்கள் கட்சிக்கு 4 பேரும் சென்றுள்ளனர். அதாவது கட்சி மாறிய 111 பேரில் 81 பேர், அதாவது 73 சதவீதம் பேர் என்.பி.எப்., பாஜக மற்றும் என்.சி.பி.ஐ. ஆகிய மூன்று கட்சிகளிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர். தெலங்கானாவில் பி.ஆர்.எஸ். கட்சியைச் சேர்ந்த 9 எம்.எல்.ஏ.க்கள் காங்கிரசிலும், கோவாவில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் 8 பேர் பாஜகவிலும் ஐக்கியமாகினர். பஞ்சாபில் 6 மாநிலங்களவை எம்.பி.க்கள் உள்பட 8 பேரும், மகாராஷ்டிராவில் உத்தவ் அணியில் இருந்து 6 மக்களவை எம்.பி.க்களும் அணி மாறியுள்ளனர்.

இதனிடையே, மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் இருந்து வெற்றி பெற்ற 20 எம்.பி.க்கள் தேசியவாத இந்திய குடிமக்கள் கட்சிக்கு (என்.சி.பி.ஐ.) ஒட்டுமொத்தமாக இடம் பெயர்ந்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவிக்கையில், 'நாங்கள் தனிப்பட்ட முறையில் கட்சி தாவவில்லை, எங்கள் பிரிவை முறைப்படி கட்சியாக இணைத்துள்ளோம்' என்று விளக்கம் அளித்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பான மனு தற்போது மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அவர்களின் பரிசீலனையில் உள்ளது. இதுதவிர மேகாலயா, மணிப்பூர், குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் மக்கள் பிரதிநிதிகள் அணி மாறியுள்ள நிலையில், வாக்களித்த மக்களை ஏமாற்றும் வகையில் அரங்கேறும் இந்த பதவி வேட்டை கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க தேர்தல் சீர்திருத்தங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துள்ளது.

---

### முதல்வர் விஜய் தொகுதியான பெரம்பூரில்

# மின்வெட்டைக் கண்டித்து நள்ளிரவில் மக்கள் சாலை மறியல்!

## மின் வாரிய ஊழியர்கள் அலட்சியம்!

*பெரம்பூர், செப்.28 -*

*சென்னை கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தீட்டித்தோட்டம் பகுதியில் நேற்று அதிகாலை 1 மணி முதல் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.*

*இதனால் அப்பகுதி மக்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து காத்திருந்தனர். ஆனால் அதிகாலை 4 மணி வரை மின்சாரம் வராததால் பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்டவர்கள் பெரம்பூர் பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்திற்கு முன்பாக பேப்பர் மில்ஸ் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரபரப்பான சூழ்நிலை நிலவியது.*

*இது பற்றி தகவல் கிடைத்ததும் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த எம்.கே.பி. நகர் இன்ஸ்பெக்டர் ஆனந்தகுமார் தலைமையில் போலீசார் வந்து மறியல் நடத்தியவர்களை சமாதானப்படுத்தினர்.*

*'மின்வாரிய ஊழியர்கள் வந்தால்தான் கலைந்து செல்வோம்' என்று தெரிவித்து தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.*

*மின்வாரிய உதவி பொறியாளர் நிரோஷா உள்பட அதிகாரிகள் வந்து பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர்.*

*இதையடுத்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். பொதுமக்கள் கூறுகையில், "தினமும் எங்களது பகுதியில் இரவு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்படுகிறது. பல முறை போன் செய்தாலும் மின்வாரிய ஊழியர்கள் உரிய பதில் அளிப்பது கிடையாது. இன்று காலை 1 மணி முதல் நான்கு மணி வரை காத்திருந்து தற்போது சாலையில் அமர்ந்துள்ளோம். முழுமையாக 5 மணி நேரம் கூட எங்களால் தூங்க முடியவில்லை. குழந்தைகள், வயதானவர்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். எனவே இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்' என்றனர்.*